**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி.**
**அசல் வழக்கு எண். 135/2019**

2025–ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 25–ம் நாள் சனிக்கிழமை சாட்சியின் வாக்குமூலம், 2023–ஆம் ஆண்டு பாரதிய சாஷ்சிய அதிநியம் பிரிவுகளின் விதிமுறைகளின்படி திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி, அவர்களால் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரமாணம் செய்விக்கப்படுகிறது.

| தேதி: | 25.10.2025 | | |
|---|---|---|---|
| பெயர்: | ராஜாராம்<br>(DW–1 Cross ) | தகப்பனார் பெயர்: | கோவிந்தராஜ் |
| கிராமம்: | வில்வராயன்நத்தம் | தாலுக்கா: | சீர்காழி |
| தொழில்: | Retd. TNCSC | வயது : | 66/2025 |

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை : 25.10.2025**

**(ஆரம்பித்த நேரம்– 13.05)**

1. நான் என்ன படித்திருக்கிறேன் என்றால் B.A. இடைநிறுத்தம். நான் வழக்கறிஞர் எழுத்தராக சிறிது காலம் இருந்தேன் என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கேட்டு வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் அவர் பதிவு செய்த ஆவணத்தின்படியான சொத்தை நான் ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். தாவா சொத்து நத்தம் வகைப்பாட்டைச் சேர்ந்தது என்றால் சரிதான்.

2. தாவா சொத்தின் பழைய சர்வே எண் 68 என்றால் சரிதான். பழைய சர்வே எண் 68ல் மொத்த விஸ்தீரணம் சுமார் 5 ஏக்கருக்கு மேல் இருக்கும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. சீர்காழி தாலுக்காவில் செம்மங்குடி என்பது ஒரு கிராமம். அதில் ஒரு உட்கிராமம் வெல்லவராயநத்தம் என்கிற வில்வராயநத்தம் என்றால் சரிதான். பழைய சர்வே எண் 68 என்பது மனைக்கட்டு பகுதி என்றால் சரிதான்.

3. பழைய சர்வே எண் 68ல் ஆரம்பத்தில் வில்வராயநத்தத்தை சேர்ந்த

ஆதிதிராவிட வகுப்பை சேர்ந்தவர்கள் குடியிருந்தார்கள் என்றால் சரிதான். நத்தம் என்பது பரம்பரையாக குடியிருப்பவருக்கே உள்ள அனுபவ பாத்தியமுள்ள சொத்து என்றால் சரிதான். 1997ம் வருடம் தமிழ்நாடு அரசின் சார்பில் நத்தத்தில் குடியிருப்பவர்களுக்கு பட்டா கொடுப்பது என்று முடிவு செய்யப்பட்டு அதன்பிறகு குடியிருப்பவர்களுக்கே எந்த அளவு விஸ்தீரணத்தில் குடியிருந்தார்களோ அந்த அளவு விஸ்தீரணத்திற்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான்.

4. 1997க்கு முன்பு அதில் குடியிருந்தவர்களுக்கு எந்த உரிமையும் ஏற்படவில்லை என்றால் சரிதான். நத்தம் திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட பட்டாவிற்கும் ஆதிதிராவிட நலத்துறையால் வழங்கப்படும் குடியிருப்பு அனுமதி ஆவணத்திற்கும் வேறுபாடு உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பழைய சர்வே எண் 68ஐ கடந்த 1997ம் வருடம் அரசு கையகப்படுத்தி 100 மனைகளுக்கு மேலாக பிரிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. அவ்வாறு பிரிக்கும்போது முதல் மனை சர்வே எண் 68/1 என்றால் சரிதான். அதேபோல 68/100 வரையில் தனித்தனியாக பிரிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. அவ்வாறு பிரிக்கும்போது எந்த மனையில் யார்யார் குடியிருந்தார்களோ அவர்களுக்கு அந்த மனைக்கு நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. அவ்வாறு பிரிக்கப்பட்டபோது மனையில் இல்லாதவர்களுக்குதான் ஆதிதிராவிட நலத்துறை சார்பில் குடியிருப்பு மனை ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. தாவா சொத்தின் சர்வே எண்ணிற்கு இரண்டு விதமான பட்டா கொடுக்கப்பட்டதற்கு இதுதான் காரணம் என்றால் சரியல்ல.

6. சர்வே எண் 68ஐ கிழக்கு–மேற்காக சாலையும், தெற்கு–வடக்காக மனையாகவும் பிரித்துள்ளார்கள் என்றால் சரிதான். அவ்வாறு பிரிக்கப்பட்ட பிறகு பெயரானது ஆதிதிராவிடர் தெரு என்பதற்கு பதிலாக வள்ளுவர் தெரு என்று மாற்றப்பட்டது என்றால் சரியல்ல. வில்வராயநத்தத்தில் வடக்கு தெரு, வள்ளுவர்

தெரு இரண்டு உள்ளது என்றால் இல்லை. வில்வராயநத்தத்திற்கு தெரு பெயர் கிடையாது, வில்வராயநத்தம் மட்டுமே.

7. வள்ளுவர் தெரு என பெயர் மாற்றம் செய்யப்பட்டு அரசு பதிவிதழில் வெளியிடப்பட்டதை மறைத்து நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வள்ளுவர் தெருவிற்கு தெற்குப் பக்கத்தில் வாதிக்கு சொந்தமாக சுமார் 10 ஏக்கருக்கு நஞ்சை நிலம் உள்ளது என்றால் வள்ளுவர் தெரு இல்லை, வில்வராயநத்தத்தில்தான் சுமார் 2 ஏக்கர் உள்ளது. அந்த இடத்தில் மின்மோட்டார் வாதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த மின்மோட்டார் என்பது சர்வே எண் 68/34ல் மனைக்கு தெற்குப் பக்கத்தில் உள்ளது என்றால் மனையிலேயே உள்ளது.

8. மின்மோட்டார் வைத்து சுமார் 80 வருடங்களுக்கு மேலாக இருக்கும். எனது தாயார் பெயர் செல்லம்மாள். அவர் கடந்த 2022ம் வருடம் இறந்துவிட்டார். என் பெற்றோருக்கு நான் ஒரே வாரிசு. தாவா சொத்து என்பது மனை எண் 34, 35 என்றால் சரிதான். மனை எண் 34, 35 க்கு எதிரில் வடக்கு பக்கத்தில் எனக்கு சொந்தமான மனை உள்ளது என்றால் சரிதான். எனக்கு நத்தம் நிலவரித்திட்டத்தில் மனை எண் 68/25ல் பட்டா கொடுக்கப்பட்டுள்ளது என்றால் அந்த பட்டாவானது ஆதிதிராவிட நலத்துறையால் வழங்கப்பட்டது. அந்த பட்டாவானது **வா.சா.ஆ.12** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9. எனது மனைவி கலைச்செல்வி பெயரில் அதேபோல் தனிவட்டாட்சியரால் சர்வே எண் 68/24க்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டாவானது **வா.சா.ஆ.13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல் தனிவட்டாட்சியரால் சர்வே எண் 68/22க்கு ராமகிருஷ்ணனுக்கு பட்டா கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பட்டாவானது **வா.சா.ஆ.14** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10. எனது 42வது வயதில் எனது தாயார் தனியாக குடியேறிவிட்டார். எனது தாயார் செல்லம்மாளுக்கு தனிவட்டாட்சியரால் சர்வே எண் 68/23ல் பட்டா

கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். ஒரே குடும்பத்திற்கு 68/23, 68/24, 68/25 என அரசை ஏமாற்றி பட்டா பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வாதி வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 68/34, 68/35 சர்வே எண்ணை சம்மந்தம் என்பவரிடமிருந்து கிரயம் பெற்றதாக கூறியுள்ளார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

11. 68/34, 68/35 சர்வே எண்ணிற்கு நத்தம் நிலவரித்திட்டத்தின் கீழ் பட்டா கொடுக்கப்பட்டது என்றால் இல்லை, 68/34 மட்டும் தான் கொடுக்கப்பட்டது. 68/35 யாருக்கும் ஒதுக்கப்படவில்லை. 68/34, 68/35 சம்மந்தம் என்பவரின் முன்னோர்கள் குடியிருந்த அனுபவத்தின் காரணத்தால் அவர்களுக்கு ஒதுக்கப்பட்டு அதன் அடிப்படையில் சம்மந்தத்திற்கு கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. சம்மந்தத்திற்கு நத்தம்நிலவரித்திட்டத்தின் கீழ் பட்டா கொடுக்கப்பட்டதால்தான் சார் பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது, ஆனால் ஆதிதிராவிடர் நலத்துறையின் கீழ் கொடுக்கப்பட்டிருந்தால் பதிவு செய்திருக்க மாட்டார்கள் என்றால் சரியல்ல.

வாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுக்கோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்தி வைக்கப்படுகிறது.

**(முடிவு நேரம்– 13.49)**